# ஹங்குரன்கெத்த பிரதேச சபை
## நுவரெலியா மாட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 09 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 11 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பல்தொழில் கட்டிடத்தின் பெறுமதியாகிய ரூபா 52,664,129 கணக்கிலிடப்படாமையால் மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு மீதி என்பன அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருதுந்தன.

(ஆ) பல்தொழில் கட்டிட நிர்மாண வேலைக்கு உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற கடன் ரூபா 16,915,039 ஆகும். இது பெறப்பட்ட

(ஏ) வெளி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளால் உருவாகிய வேலைகளுக்கான கடன்பட்டோர் தொகை ரூபா 3,800,852 ஆகும். வேலைகளுக்கான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,492,922 ஆகும். இவை பேரேட்டில் மாறுபடக் குறிப்பிடப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதியும் கடன்பட்டோர் மீதியும் ரூபா 307,930 அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 70,785,501 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,426,613 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,356,211 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

### 2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

(அ) 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 59 ஆம் விதியின் பிரகாரம் தொழில் பற்றிய பரிசீலனைகளை மேற்கொண்டு அதற்கமைய அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிட வேண்டுமாயினும், அவ் வறிவுறுத்துரை கடைப்பிடிக்கப்படவில்லை.

(ஆ) கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டில் ஹங்குரன்கெத்த நகரில் மாத்திரம் 25 வியாபார நிலையங்களிலிருந்து அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2011, 2012 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதிலான முன்னேற்றம் முறையே ரூபா 427,610 மற்றும் ரூபா 297,028 என அமைந்ததால் 31% பின்னடைவு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152(2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொழில் முயற்சி ஒன்றைச் செய்து வரும் சகல நபர்களிடமிருந்தும் வரி அறவிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.5 பிற வருவாய்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் (ஈ) உப பிரிவு மற்றும் 119 ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபை தயாரித்திருக்கும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ம் இலக்க பிரதேச சபைகள் உப விதிகளின் 33(16) உப பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வாரச் சந்தையை நடாத்தும் சட்டபூர்வ அதிகாரம் பிரதேச சபைக்கு மாத்திரமே உண்டு. எனினும், அச் சட்டபூர்வ உரிமையின்படி நடவடிக்கை மேற்கொள்ளாது ரிகில்லகஸ்கட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வாரச் சந்தையை நடாத்துவதற்கு இடமளித்ததால் ஆண்டொன்றிற்கு ஏறக்குறைய ரூபா 533,620 இழப்பு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

ஏற்பட்ட ரூபா 142,817 நட்டத்தைப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1)(1) ஆம் பிரிவு மற்றும் திறைசேரிச் செயலாளரின் டீஎம்எஸ்/17/2/28 ஆம் இலக்க 2009 மே 25 ஆந் திகதிய சுற்றறிக்கையில் காணப்படும் அறிவுறுத்துரைகளுக்கு முரணாக 2012 ஆம் ஆண்டின்போது 17 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சபையின் நிதியிலிருந்து ரூபா 2,446,591 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 பந்தி மற்றும் 1988 பிரதேச சபைகள் விதிக் கோவை 177 ஆம் விதிக்கு முரணாக 2 சந்தர்ப்பங்களில் ரூபா 522,000 க்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.6 ஒப்பந்த நிர்வாகம்

(அ) மத்திய மாகாண கமத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 397,324 செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருட்களுக்கான கட்டிடத்தின் கூரை ஒரு இடத்தில் கீழே சரிவுற்றிருந்தது கூரையில் பொருத்தப்பட்ட பலகை சரிவரப் பொருத்தப்படாமையால் மழை நீரில் நனைந்து அது சிதைந்தவாறிருந்தது.

(ஆ) சபையின் புதிய கட்டிடத்தின் முன்பாகச் சிறு கற்களைப் பரப்புவது தொடர்பாக ரூபா 438,480 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், சிறு கற்களைப் பதிக்கும் கீழ்த் தளம் மட்டமாக்கப்படவில்லை என 2012 ஒக்டோபர் 18 ஆந் திகதிய பரிசீலனையின்போது புலனாகியது. மேலும், சிறு கற்களுக்கிடையே 2 மில்லி மீட்டர் இடைவெளி இருக்க வேண்டியபோதும், சில சிறு கற்களுக்கிடையே இடைவெளி ஏறக்குறைய 05 மில்லி மீட்டரில் அமைந்திருந்தது. கட்டிடத்திற்கு சமாந்தரமாகப் பதிக்கப்பட்ட சிறு கற்களின் பொருட்டு KERBS பயன்படுத்தப்படாமையால் வெளியே தோற்றம் அளிக்கும் விதத்தில் குழிகள் உருவாகியிருந்தது அவதானிக்கப்பட்டது.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) கமத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சினதும் உள்ளூராட்சித் திணைக்களத்தினதும் 2009 மற்றும் 2012 நிதியேற்பாட்டில் ரூபா 6,645,626 செலவில் அரையளவு வாயு உள்ளடக்க முறைக்கமைய 2 கொம்போஸ்ட் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்திற்கு முறையான திட்டமோ அல்லது செயல் முறைகளோ இல்லாதிருந்தமை, பிரயோகப்படுத்தக்கூடியவாறு அமையாமை, செயற்திட்டம் தொடர்பாக முறையான அறிவு மற்றும் பயிற்சி என்பன இல்லாமை ஆகிய பிரச்சினைகள் காரணமாக இச் செயற்திட்டம் செயற்படாத நிலையை எய்தியது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுகள் முறையாக அகற்றப்பட வேண்டுமாயினும், சபையால் கழிவுகள் அகற்றப்படும் வேகம கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் 2013 பெப்ரவரி 12 ஆந் திகதியன்று பரிசீலிக்கப்பட்டபோது சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் நிலையத்தைச் சூழவுள்ள இடங்களில் இருந்தமையும் பிரதேசத்தில் அதிக துர்நாற்றம் நிலவியதும் சுற்றாடல் மாசடைந்து நீர் நிலைகள் மாசடைவதற்கு ஏதுவாயிருந்தமையும் புலனாகியது. இது சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறையில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்